**இலங்கை சமுத்திர பல்கலைக்கழகம் - 2019**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இலங்கை பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழக சட்டத்தில் 51 (2) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரை மற்றும் 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கங்களைத் தவிர்ந்து இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

-----------------------------------------------------------------------------------------------

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு

எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து இலங்கை சமுத்திர பல்கலைக்கழகததின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையற்பாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு

நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல் என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

### 1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்க இணங்கியொழுகாமை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | உரிய தரநியமங்களுக்கு தொடருடன் இணங்கியொழுகாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| அ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 03 இற்கு அமைவாக உரிய அமைப்புகளால் காலப்பகுதிக்குள் ஏற்பட்டுள்ள பிழைகளை செவ்வையாக்கும்போது, கடந்த காலத்திற்கு சீராக்குதல்களை மேற்கொண்டு நிதிக் கூற்றுகளில் வெளிப்படுத்த வேண்டுமாயினும், ரூபா. 18,294,286 தொகை பற்று வைத்தலும் ரூபா.1,081,250 தொகை வரவு வைத்தலும் தொடர்பாக அவ்வாறு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | இலங்கை அரச துறை தரநியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 07 இல் 47 ஆவது பந்தி பிரகாரம் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் உருப்படிகளில் நியாயமான பெறுமதி கவனிக்கத்தக்க அளவில் வேறுபாடு உள்ளவிடத்து ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு அல்லது ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை மீள்கணிப்பீடு செய்தல் வேண்டுமாயினும், மீளாய்விற்கான ஆண்-டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் தேறிய பெறுமதி ரூபா.500,305,508 ஆன பல்கலைக்கழகத்தின் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபரணங்கள் தொடர்பில் மீள்கணிப்பீடு செய்வதற்கு நடவடி-க்கை மேற்கொள்ளப்படவில்லை. அதே-போன்று அந்த தரத்தின் 21 ஆவது பிரிவிற்கு முரணாக ரூபா. 1,301,495 ஆன மீண்டுவரும் இயல்பிலான வாகனங்களை பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்பு செலவினங்கள் மூலதனமயப்படுத்தப்பட்டிருந்தது. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | இலங்கை அரச துறை தரநியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்துக்களின் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக ரூபா. 53,925,596 ஆன 02 சொத்து உருப்படிகள் முற்று முழுதாக தேய்மானம் செய்திருப்பினும் மேலும் அந்த சொத்துக்கள் பயன்பாட்டில் இருந்தது. அதன்படி மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்கள் 03 இன்படி மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | மீள்கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. | இலங்கை அரச துறை தரநியமங்கள் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும |

## 1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்

------------------------------------

**பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திருகோணமலை கல்லூரியில் கட்டிடங்களை மேம்படுத்தும் பொருட்டு செலவிடப்பட்டிருந்த ரூபா. 4,153,670 ஐ கட்டிடங்கள் கணக்கில் பற்று வைப்பதற்குப் பதிலாக முற்பணக் கணக்கில் பற்று வைத்ததன் காரணமாக மீளாய்விற்கான ஆண்டின் இறுதியில் அந்த பெறுமதியில் சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி குறைவாகவும் முற்பணக் கணக்கில் மீதி அதிகமாகவும் நிதிக் கூற்றுகளில் காண்பிக்கப்பட்டிருந்தது. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | ஆண்டில் செலவிடப்பட்ட செலவினங்களை செவ்வையாக்குவதற்கு கணக்கு வைக்கப்படுதல் வேண்டும். |
| (ஆ) | அட்டுறு செலவினமாக கணக்கு வைக்கப்படாத முன்னரான ஆண்டுகளுக்கு ஏற்புடையதான இரண்டு நிருமாணிப்புகளின் பொருட்டு செலுத்தப்பட வேண்டிய ரூபா. 3,764,056 தொகை சீராக்குகையில், அட்டுறு செலவின கணக்கில் பற்று வைத்ததன் காரணமாக ஏற்பட்ட பிழையினை செவ்வையாக்குகையில் உரிய சொத்துக்களின் கணக்கை பற்று வைப்பதற்கு பதிலாக பற்றாக்குறை மற்றும் மிகை கண்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. | செவ்வையாக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | பிழையினை செவ்வையாக்குவதற்குப் பதிலாக ஜெர்னல் குறிப்புகளை இடும்போது சரியாக கணக்குகளை அடையாளம் காணப்பட்டு சீராக்குதல் வேண்டும். |

## 1.5.4 கணக்காய்விற்கு எழுத்திலான சாட்சிகள் இல்லாமை

**பின்வரும் தகவல்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.**

| விடயம் | தொகை ரூபா | வழங்கப்படாத கணக்காய்வு சாட்சிகள் | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|---|
| முற்பணம், கிடைக்கப்பெற வேண்டிய கற்கைநெறி கட்டணங்கள், கிடைக்கப்பெற வேண்டிய வதிவிட கட்டணங்கள், செலுத்தப்பட வேண்டிய மீதிகள் | 3,742,163<br>11,797,123<br>215,404<br>34,234,573 | அட்டவணை | உரிய மீதிகள் ஏற்பட்ட முறை தொடர்பாக அடையாளம் காணப்பட்டு வருகின்றது. | நிதிக் கூற்றுக-ளில் காண்பிக்-கப்படும் மீதிக-ளுக்கு ஏற்புடை-யதான அட்ட-வணைகளை பேணுதல் |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டியவைகளும்

### 1.6.1 கிடைக்கப்பெறுவனவைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கிடைக்கப்பெற வேண்டிய 06 கணக்கு விடயங்களின்கீழ் நீண்ட காலமாக இருந்து வரும் சிராக்கப்படாத மீதிகளின் மொத்தப் பறுெமதி ரூாப. 844,055 ஆகும். | பதில் வழங்கப்படவில்லை. | கிடைக்கப்பெற வேண்டிய தரப்புகளை அடையாளம் காணப்பட்டு அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும் |

### 1.6.2 சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள் விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க சமுத்திர பல்கலைக்கழகச் சட்டம் 10(1)மற்றும்10(3) பிரிவுகள் | பல்கலைக்கழகத்திற்கு துணைவேந்தர் மற்றும் "உள்ளடக்கும் அங்கீகரிப்புச் சபை மற்றும் தரச் சான்றுப்-படுத்தல் சபை" பொருட்டு பணிப்பாளர் நியமனம் செய்தல் வேண்டுமாயினும், பல்கலைக்கழகத்தின் ஆரம்-பம் தொடக்கம் அப் பதவிக-ளில் அலுவலர்கள் நியமனம் செய்யப்படவில்லை. | துணைவேந்தர் நிய-மனம் செய்வதற்கு நடவடிக்கை மேற்-கொள்ளப்படுமென்பது டன், அங்கீகரிப்புச் சபை மற்றும் தரச் சான்றுப்படுத்தும் சபை என்பவற்றின் பொருட்டு பதில் கடமையாற்றும் பணி-ப்பாளர் நியமனம் செய்யப்பட்டுள்ளார். | சட்டத்தின் ஏற்பாடுகளி-ன்படி நடவ-டிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதிக் கோவை 206 மற்றும் 565(2) | வைப்புகளை மீள செலுத்துகையில் நிதி ஒழுங்குவிதி பிரகாரம் பின்பற்றப்பட வேண்டிய ஏற்பாடுகளை பின்பற்றப்படாத சந்தர்ப்பங்கள் காணப்பட்டமையால், ஏதேனும் குறித்த திகதியில் ஒரு நபருக்கு/ நிறுவனமொன்றுக்கு மேலும் சீராக்கப்பட வேண்டிய வைப்புகளின் பெறுமதி அடையாளம் காணப்பட முடியவில்லை. அதேபோன்று வைப்பு ஆவணங்களையும் பேணப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய ஆவணங்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைபயன்

மீளாய்விற்கான ஆண்டில் தொழில்பாட்டு விளைபயன் ரூபா. 51,749,516 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டில் பற்றாக்குறை ரூபா. 5,016,544 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா. 46,732,972 ஆன வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு ஆளுக்குரிய வேதனாதிகள் அதிகரித்தல் பிரதான காரணமாக அமைந்துள்ளது.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) பல்கலைக்கழகத்தின் நிருவாகம், கல்விசார் சபைகள், வகுப்பறைகள் மற்றும் நூலகங்கள் என்பவற்றின் பயன்பாட்டுக்காக 2017 ஆம் ஆண்டு திசெம்பர் தொடக்கம் மாதாந்த வாடகையாக ரூபா. 2.3 மில்லியன் படி 16800 சதுர அடிக்கு புதிய கட்டிடமொன்றை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. மாதாந்த வாடகைக்கு மேலதிகமாக அந்தக் கட்டிடத்தின் உள்ளக வடிவமைப்பு பணிகளின் பொருட்டு ரூபா. 22 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. ஆயினும் இதனூடாக பல்கலைக்கழகத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் மாணவர்களின் எண்ணிக்கையில் அல்லது நடாத்தப்படும் பட்டப்படிப்பு கற்கை நெறிகளில் வளர்ச்சி ஏற்பட்டுள்ளதாக அடையாளம் காண்பதற்கு முடியவில்லை. | 2020 ஆண்டில் வாடகை கட்டிடங்களில் இருந்து வெளியேறுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | வாடகை கட்டிடம் பெற்றுக்கொள்வதன் நோக்கத்தினை நிறைவெற்றிக் கொள்வதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழகச் சட்டத்தில் 5.1 (25) பிரிவின்படி தாபிக்கப்பட வேண்டிய Sea Training Vessel Maintenanous அலகினை மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரையும் தாபிக்கப்படவில்லை. இந்த அலகினை பயன்படுத்துவதற்காக உபயோகப்படுத்த முடியுமான 1994 தொடக்கம் 2015 காலவெல்லைக்குள் கிடைக்கப் பெற்றிருந்த Inboard , Outboard மற்றும் அதிவேக 13 படகுகள் பிராந்திய பல்கலைக்கழகங்களில் பயனற்றும் குறைந்த பயன்பாட்டுடனும் காணப்பட்டது. | பணியாற்தொகுதி ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி கிடைக்கப்பெறவில்லை. | பூரண ஆற்றலுடன் சொத்துக்களை பயன்படுத்தல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 ஆம் ஆண்டில் 04 பட்டப் படிப்பு கற்கை நெறிகளின்கீழ் 87 மாணவர்கள் பதிவாகியிருந்ததுடன், 2016 ஆம் ஆண்டில் 156 மாணவர்கள் வரை பதிவு வளர்ச்சியடைந்திருப்பினும், அதன் பின்னர் போதியளவு வளர்சி ஏற்படவில்லை என்பதுடன், 2019 ஆம் ஆண்டில் 05 கற்கைநெறிகளின்கீழ் சித்தியடைந்த மாணவர்களின் எண்ணிக்கை 207 ஆகும். | 2020 இல் 6 கற்கை நெறிகள் வரை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கற்கைநெறிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை என்பன விருத்தி செய்து கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | 2015 ஆம் ஆண்டில் தொழில்சார் கற்கை நெறிகள் (NVQ) 12 இன் கீழ் கற்கின்ற 466 மாணவர்களின் எண்ணிக்கையில் போதியளவு வளர்ச்சி காணப்படவில்லை என்பதுடன், மீளாய்விற்கான ஆண்டில் அவ்வாறான 14 கற்கைநெறிகளின்கீழ் பதிவாகியுள்ள மாணவர்களின் எண்ணிக்கை 604 ஆகும். அதன்படி பட்டப் படிப்பு கற்கைநெறிகள் மற்றும் தொழில்சார் கற்கை நெறிகளின் பொருட்டு அதிகளவிலான மாணவர்களை பதிவு செய்து கொள்வதன்மீது முகாமைத்துவம் கவனம் செலுத்தப்படவில்லை. | எதிர்வருங் காலத்தில் முன்னேற்றகரமான நிலைமையினை ஏற்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் | கற்கைநெறிகள் மற்றும் மாணவர்களின் எண்ணிக்கை என்பன விருத்தி செய்து கொள்வதற்கு முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்விற்கான ஆண்டில் பட்டப்படிப்பு, டிப்ளோமா, சான்றிதழ் (ISO , NVQ மற்றும்Non NVQ) 23 கற்கைநெறிகளின்கீழ் 1922 மாணவர்களின் பங்களிப்புடன் 107 நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. ஆயினும் மீளாய்விற்கான ஆண்டில் 18 கற்கை நெறிகளின்கீழ் 61 நிகழ்ச்சித்திட்ட- | பதில் வழங்கப்படவில்லை | பல்கலைக்கழகத்தின் பீடங்களின் செயலாற்றுகை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | ங்கள் மட்டும் நடாத்தப்பட்டிருந்ததுடன், அதில் 1339 மாணவர்கள் மட்டும் பதிவாகி இருந்தனர். | | |
| (ஈ) | தங்கல்லை பீடம் மற்றும் கல்லூரியில் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஒரு பட்டப் படிப்பு கற்கைநெறி மட்டும் நடாத்தப்பட்டிருந்ததுடன், 40 பேர்களைக் கொண்டு ஆட்சேர்ப்புச் செய்யப்படும் மாணவர் எண்ணிக்கையிலும் வளர்ச்சி ஏற்படவில்லை. 2015 ஆம் ஆண்டில் 150 மாணவர்களின் பங்களிப்புடன் நடாத்த-ப்படும் 08 சான்றிதழ் கற்கை நெறிகளில், 2019 ஆம் ஆண்டாகும்போது 79 மாணவர்-களின் பங்களிப்புடன் நடாத்தப்படும் கற்கை-நெறிகள் 4 வரை குறைந்திருந்தது. 2018 ஆம் ஆண்டில் ஒரு ஆண்டு கற்கைநெறியான டிப்ளோமா கற்கைநெறி அறிமுகப்படுத்தியிரு-ந்ததுடன், அதன் தற்கால மாணவர்களின் எண்ணிக்கை 20 ஆகும். ஆயினும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 23,182,974 ஆன மீண்டுவரும் செலவினம் 2019 ஆம் ஆண்டில் ரூபா. 62,940,565 வரை வளர்ச்சியடைந்திருந்தது. | பதில் வழங்கப்படவில்லை | பல்கலைக்கழகத்தின் பீடங்களின் செயலா-ற்றுகை விருத்தி செய்து கொள்ளுதல் வேண்டும் |
| (உ) | கணக்காய்வில் மேற்கொண்ட மாதிரி பரிசோதனை படி மட்டக்குளி பீடத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறிகளில் 674 மணித்-தியாலங்கள் உள்ளக்கப்பட வேண்டிய 20 பாடங்களுக்கு ஏற்புடையதான விரிவுரையா-ளர்களின் பதிவு புத்தகங்கள் 3 ஐ கணக்காள்வில் சமர்ப்பிக்கப்படவில்லை என்ப-துடன், சமர்ப்பிக்கப்பட்ட விரைவுரை-யாளர்களின் பதிவு புத்தகங்களில் 08 பாடங்களின்கீழ் 435 மணித்தியாலங்களை பூர்த்தி செய்வதற்கான தகவல்கள் உள்ளடக்கப்படவில்லை. அதேபோன்று குறிப்பு வைத்திருந்த விரிவுரையாளர்களின் பதிவு புத்தகங்களின்படி 38 விடயங்களின்கீழ் பூர்த்தி செய்யப்பட வேண்டிய 1854 மணித்தியா-லங்களில் 1218 மணித்தியாலங்கள் மட்டும் பூர்த்தி செய்யப்பட்டதாக குறிப்பு வைக்கப்ப-ட்டிருந்தது. அதன்படி கற்கைநெறிகளின் உள்ளடக்கத்தை பூர்த்தி செய்தலை பதிவு செய்வதற்காக பல்கலைக்கழகத்தால் அறிமுகம் செய்திருந்த விரிவுரையாளர்களின் பதிவு புத்தகங்கள் (Lecture Record Book) தொடர்பாக உரிய மேற்பார்வை இருக்க-வில்லை. தகவல்கள் முழுமைபெறாமை போன்ற குறைப்பாடுகள் இருந்தமை கணக்-காய்வில் வெளிப்படுத்திக் கொள்ளப்பட்டது. | செவ்வையாக்கு-வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள-ப்படுகிறது. | ஏற்புடைய தகவல் முறைமை இற்றைப்-படுத்தி பேணுதல் வேண்டும். |
| (ஊ) | பரீட்சைகளுக்கு தோற்றிய மாணவர்கள் தொடர்பில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரிசோதனையில் மட்டக்குளிய பீடத்தின் பட்டப்படிப்பு கற்கைநெறிகளின்கிழ் நடாத்த- | துணைச் சட்டங்-களை அறிமுகப்ப-டுத்துவதற்கு நடவ-டிக்கை மேற்கொ- | ஏற்புடைய தகவல் முறைமை இற்றைப்-படுத்தி பேணுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ப்பட்ட பரீட்சைகளில் பெறுபேறுகள் வழங்கப்பட்ட 36 பாடங்களுக்கு ஏற்புடையதாக முதலாவது முறையாக 1306 வினாப்பத்திரங்களில் தோற்றுவதற்கு மாணவர்கள் தகமை பெற்றிருப்பினும், 924 விணாப்பத்திரங்களல் மட்டும் தோற்றியிருந்தனர். அதன்படி பல்கலைக்கழகத்திற்குரிய ஒவ்வொரு கற்கைநெறிகளின்கீழ் பரீட்சைகளில் தோற்றுவதற்கு தகைமை பெறுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அதன்கீழ் பரீட்சையில் தோன்றுகின்ற மாணவர்களின் எண்ணிக்கை அடையாளம் காண்பதற்கு முறைமையொன்று இல்லை-யென்பதை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. | ள்ளப்படும். | |
| (எ) | பட்டப்படிப்பு கற்கைநெறிகளின்கிழ் இரண்டு வாரங்களுக்குள் விடைதாள்களை பரீட்சித்து ஒருவார மதிப்பீட்டு காலத்தின் பின்னர் பரீட்சை பெறுபேறுகளை வழங்கும் முறைமை பல்கலைக்கழகத்தால் அறிமுகப்படுத்தியிருக்கவில்லை. மட்டக்குளி பீடத்திற்கு ஏற்புடையதாக மீளாய்விற்கான ஆண்டில் மே மற்றும் யூன் ஆகிய மாதங்களில் நடாத்தப்பட்ட பரீட்சைகள் தொடர்பில் மேற்கொண்ட மாதிரி கணக்காய்வு பரீட்சையின் பின்னர், 12 தொகுதிகளின்கீழ் 85 பாடங்களில் 3036 வினாப்பத்திரங்களில் தோற்றுவதற்கு மாணவர்கள் தகைமை பெற்றிருந்ததுடன், மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியிலும் 09 தொகுதிகளின்கீழ் 36 பாடங்களுக்கு ஏற்புடையதான 924 விடைத்தாள்களுக்கு மட்டும் பரீட்சை பெறுபெறுகள் வழங்கப்பட்டிருந்தன. எஞ்சிய வினாப்பத்திரங்களுக்கு மாணவர்கள் தோற்றியிருந்தமை தொடர்பாக உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஒழுங்கு முறையிலான முறைமை பல்கலைக்கழகம் பின்பற்றியிருக்கவில்லை. | போதியளவு விரிவுரையாளர்கள் இல்லாத படியால் வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்வதற்கு பணியாற்றப்பட்டுள்ளது. | அறிமுகப்படுத்தியுள்ள முறைமைக்கு ஒழுங்கமைதல் வேண்டும். |
| (ஏ) | கற்கைநெறிகளின் உள்ளடக்கம், ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் கல்விசார் பணியாற்தொகுதியின் நடவடிக்கைகள் என்பவற்றுக்கு அளவுகோள்களை தயாரிப்பதற்கு பல்கலைக்கழக சட்டத்தில் 23 ஆவது பிரிவு பிரகாரம் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ள, உள்ளடக்கங்கள் அங்கீகரிப்புச் சபை மற்றும் தரங்களை உறுதிப்படுத்தும் சபை பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட 2015 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்விற்கான ஆண்டு வரை 03 அமர்வுகளில் மட்டும் பங்குபற்றியிருந்ததுடன், குறித்த அமர்வுகளில் பல்கலைக்கழகத்தின் பணியாற்தொகுதியினரின் உள்ளீர்ப்பு நடவடிக்கைகள் தொடர்பாக மட்டும் கலந்துரையாடியிருந்தன. | பதில் வழங்கப்படவில்லை | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.3 பயனற்ற அல்லது குறைந்த பயன்பாட்டுடன் கூடிய சொத்துக்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| சமுத்திர பல்கலைக்கழகத்திற்குரிய கட்டிடங்களின் தொகுதியில் 11,778 சதுர அடி அளவு குறை பயன்பாட்டுடன் காணப்பட்டது. | 2020 தொடக்கம் இந்த கட்டிடங்களின் தொகுதி பயன்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | சொத்துக்களை பூரண ஆற்றலுடன் பயன்படுத்தப்படுதல் வேண்டும். |

## 3.4 மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பட்டப் படிப்பு கற்கைநெறிகள் நடாத்தப்படும் உயர் கல்விப் பிரிவில் விரிவுரையாளர்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி 31 பேர் ஆவதுடன், 2019 ஆம் ஆண்டு இறுதியில் உண்மையான பணியாற்தொகுதி 25 ஆகியதால் 6 வெற்றிடங்கள் காணப்பட்டன. ஆயினும் ஒப்பந்த அடிப்படையின்மீது 02 விரிவுரையாளர்களினதும் 67 வெளியக விரிவுரையாளர்களினதும் சேவை பெற்றுக்கொண்டு ஒழுங்குமுறையில் ரூபா. 1,200,000 மற்றும் ரூபா. 5,468,025 ஆன கொடுப்பனவு செலுத்தப்பட்டிருந்தது. | 10 விரிவுரையாளர்கள் புலமைப் பரிசில்களின் பொருட்டு வெளிநாடு சென்றுள்ளதால், கற்கை நடவடிக்கைகளை இற்றைப்படுத்தி பேணிச் செல்வதற்கு வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதியை ஆகக்கூடிய ஆற்றலுடன் ஈடுபடுத்திக்கொண்டு வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்வதை குறைத்துக் கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) | தொழில்சார் கற்கைநெறிகளை நடாத்தப்படும் தொழில்சார் கல்விப் பிரிவின் ஆலோசகர்களின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி 74 பேர் ஆவதுடன், 2019 ஆம் ஆண்டு இறுதியில் உண்மையான பணியாற்தொகுதி 18 பேர் ஆவார்கள். இதற்கு மேலதிகமாக ஒப்பந்த அடிப்படையில் 25 ஆலோசகர்களினதும் 79 வெளியக ஆலோசகர்களினதும் சேவை பெற்றுக்கொண்டு ஒழுங்கு முறையில் ரூபா. 9,976,285 மற்றும் ரூபா.5,735,245 கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது. | உள்ளீர்ப்பு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்படாமை மற்றும் ஆட்சேர்ப்புத் திட்டம் அங்கீகரிக்கப்படாமை இதற்கு காரணங்களாகி உள்ளன. | நிரந்தர பணியாற் தொகுதியினரை ஆட்சேர்ப்புச் செய்துக் கொண்டு வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்வதனை குறைத்தக் கொள்ளுதல் வேண்டும். |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாட்சி

### 4.1 வரவு செலவு கட்டுப்பாடு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

.

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டு 31 ஆம் இலக்க இலங்கை சமுத்திர பல்கலைக்கழகத்தின் 54 ஆவது பிரிவு பிரகாரம் ஏதேனும் நிதி ஆண்டுக்கு ஏற்புடையதாக வருடாந்த வரவு செலவு மதிப்பீடு மற்றும் வருடாந்த வரவு செலவுடன்கூடிய நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்படவில்லை. | 2020ஆம் ஆண்டு தொடக்கம் வரவு செலவு தயாரிக்கப்படும். | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் வரவு செலவு மதிப்பீடு தயாரிக்கப்படுதல் வேண்டும். |